பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 09 திங்கட்கிழமை 21.02.2022 கதிர் 334

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் சிக்கினார்

நுவரெலியா, பொகவந்தலாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொராவத்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே நேற்று இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளார்.

☞ 2

# இறுதிச் சமர்க்களத்தில் இறுதிவரை போராடிச் சாவடைந்தவரே பிரபாகரன்

## அவரின் மரணத்தை வைத்து சிலர் தொடர் அரசியல்; முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா பதிலடி



இறுதிப் போரில் பிரபாகரன் சரணடையவில்லை. அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை. இறுதிப் போர்க்களத்தில் அவர் இறுதி வரைப் போராடியே உயிரிழந்தார்.

- இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழந்தார் என்று

☞ 2

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

கொழும்பு, கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானைப் பிர தேசத்தில் இருவருக்கிடையில் ஏற் பட்ட மோதலில் ஒருவர் வெட்டிப் படு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று கல்கிசைப் பொலிஸார் தெரிவித்த னர்.

கல்தேமுல்ல, மொரட்டுவை பிர தேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் உடனடியாக களுபோவில வைத் தியசாலையில் சேர்க்கப்பட்ட போதி லும் அவர் சிகிச்சை

☞ 2

# வடக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் யாழில் இன்று பெரும் போராட்டம்

## சம்பள உயர்வு, நிரந்தர நியமனம் கோரி







(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரி யும், நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும் யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அலுவலகத்துக்கு முன் பாகவும், அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் செயல கத்துக்கு முன்பாகவும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகவும் அதற்கு உட்பட்ட காலப்பகுதி யிலும் முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றியிருந்தவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங் கப்படுகின்றது. இந்நிலையில், சம்பள உயர்வு அதிகரிக்கப்பட வேண் டும் எனக் கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

☞ 2

## வவுனியாவிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்!

### வடக்கு ஆளுநரிடம் மகஜரும் கையளிப்பு



(வவுனியா நிருபர்)

சம்பள அதிகரிப்பு கோரி வவுனியாவில் முன்பள்ளி ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தமை யுடன், வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

வவுனியா, பூங்கா வீதியில் உள்ள ஆளு நரின் பிராந்திய அலுவலகம்

☞ 2

## வெளிநாட்டுத் துப்பாக்கியுடனும் தோட்டாக்களுடன் ஒருவர் கைது

மாத்தளை, இரத்தோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பர கிரிஎல்ல பிரதேசத்தில் ஓட்டோ ஒன்றில் வெளிநாட்டுத் துப்பாக்கி யைக் கொண்டு சென்ற நபர் ஒரு வரைப் பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

இரத்தோட்டை பிரதேசத் தைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைய டுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்றும், 12 தோட்டக் களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு செல்வதற் குப் பயன்படுத்தப்பட்ட

☞ 2

### தூத்துக்குடியூடாக இலங்கைக்கு

## 10 கிலோ ஐஸ் போதைப்பொருளை கடத்த முயன்ற 7 பேர் மாட்டினார்கள்



(ந.லோகதயாளன்)

தூத்துக்குடியூடாக இலங்கைக்குக் கடத்தப்பட விருந்த 10 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் நேற்றிரவு கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்குப்படகுமூலம்போதைப்பொருள் கடத்தப்படவுள்ளதாகக் கிடைத்த தகவலின் பெய ரில் தமிழகப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே

☞ 2

## கமல் லியனாராச்சி காலமானார்



இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவ ரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கமல் லியனாராச்சி நேற்று காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான கமல் லியனாராச்சி இலங்கை இதழியல் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணியாற்றியிருந்த

☞ 2




# தமிழக முதலமைச்சருடன் ஜீவன் குழுவினர் சந்திப்பு



(ந.லோகதயாளன்)

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் இன்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து உரையாடினர்.

இன்று காலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இராஜாங்க அமைச்சருடன் இலங்கைப் பிரதமரின் செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மருதுபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் பங்கு கொண்டனர். மீனவர் பிரச்சினை, கச்சத்தீவுஒப்பந்தம்மற்றும்உட்கட்டமைப்பு சம்பந்தமாகவும், இலங்கை மற்றும் தமிழகத்தின் நட்புறவு சம்பந்தமாகவும் இதன்போது பேச்சு நடத்தியதாக இராஜாங்க அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

# 21 இந்திய மீனவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்று வருடங்கள் சிறை!

இந்திய மீனவர்களுக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 21 இந்திய மீனவர்களை பருத்தித்துறை மீனவர்கள் சுற்றிவளைத்துப் பிடித்தனர்.

பருத்தித்துறை மீனவர்களிடம் இருந்து இந்திய மீனவர்களை மீட்ட கடற்படையினர், அவர்களைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

21 மீனவர்களையும் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதிவான் உத்தரவிட்டார். இந்நிலையில், குறித்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 21 மீனவர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை விதித்த நீதிவான், அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தார்.

## வவுனியாவிலும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக இன்று காலை குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, முன்பள்ளி கலைத்திட்டத்தைமட்டும்மாற்றுவதால்என்னபயன்?, இன்றைய விலை வாசியில் 6000 ரூபா போதுமனதா?, உழைப்புக்கான ஊதியமும் கௌரவமும் வழங்கப்பட வேண்டும், கல்விப் பயணத்தின் முதற்படியான ஆசிரியர்களை முழுமையாக்குங்கள என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்களாகப் பல வருடங்களாக நாம் பணியாற்றுகின்ற போதும், உதவித் தொகையான வெறும் 6,000 ரூபா மட்டுமே எமக்குக் கிடைக்கின்றது. தற்போதைய பொருள்களின் விலையேற்றத்துக்கு மத்தியில் இந்த 6,000 ரூபா பணத்தை வைத்து நாம் எவ்வாறு குடும்பச் சீவியத்தைக் கொண்டு நடத்த முடியும்? பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் எனப் பலரும் சேவை நோக்கத்தோடு பணியாற்றி வருகின்றோம். எனினும், எம்மால் தொடர்ந்தும் அவ்வாறு செயற்பட முடியாது. எமது குடும்பங்கள் பட்டினியால் இறக்கும் நிலைவரும். எனவே, எமக்கான சம்பளத்தை அதிகரித்து வழங்குமாறு நாம் இந்த அரசிடம் கோருகின்றோம். ஒவ்வொரு அரசியல்வாதிகளும் வாக்குறுதிகளை மட்டுமே தருகின்றார்கள். எமக்குத் தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, முன்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கை தொடர்பான மகஜரைப் பெற்றுக் கொண்டதுடன், ஒரு வாரத்துக்குள் தீர்க்கமான முடிவைப் பெற்றுத் தருகிறேன் என உறுதியளித்தார். இதையடுத்துப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (100)

## 10 கிலோ ஐஸ் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகில் ஏற்றி எடுத்துச் செல்லப்பட்ட 10 கிலோ ஐஸ் போதைப்பொருள் கடலில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது ஐஸ் போதைப்பொருளைக் கடத்த முயன்ற படகில் இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி இலங்கை நாணயத்தில் சுமார் 10 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தூத்துக்குடி கியூப் பிரிவு பொலிஸாரே இவற்றைக் கைப்பற்றியதோடு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கமல் லியனாராச்சி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் நேற்று சுகவீனம் காரணமாக காலமானார்.

கமல் லியனாராச்சி முன்னர் 'லக்பிம' நாளிதழில் சிரேஷ்ட ஊடகவியலாளராகப் பணியாற்றியிருந்தார்.

தொடர்ந்து இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகப் பணியாற்றி வந்த நிலையில் காலமானார்.

## வெளிநாட்டுத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டோவும் இரத்தோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில், இரத்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு முன்பள்ளி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஆதரவு வழங்கினர். போராட்டக்காரர்களின் இடத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் வருகை வந்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்களால் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாகவும் முன்பள்ளி ஆசிரியர்கள் கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு வவுனியாவுக்குச் சென்றதன் காரணமாக இன்று அவரைச் சந்திக்க முடியாது எனப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர் என்று ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்ற முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் ஆளுநரின் செயலாளர் தம்மை வந்து சந்திக்க வேண்டும் எனக் கோரி தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## இறுதிச் சமர்க்களத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் இறுதிப் போரில் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனின் சாவை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர். இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை. அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர்.

பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு.

பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் விரும்பின. அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்திருந்தன. எனினும், பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதி வரைப் போராடியே சாவடைந்தார் - என்றார்.

## குடும்பஸ்தர் ஒருவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலனின்றி மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாணிக்கக்கல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக் காகப் பயன்படுத்திய பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொலைபேசி இலக்கம்-
076 443 8622

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்
புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்
2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும்
முதற்தர மாதிரி வினாப்பத்திரம்
வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகளும், வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பம்
பரீட்சை நாள் - ஞாயிற்றுக்கிழமை
பரீட்சை நிலையம் - நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்புறம்)
பரீட்சை நேரங்கள் - காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15
விரும்பிய நேரங்களில் பரீட்சைகளை எழுதலாம்
தரம் 3, தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 20.02.2022
வினாவிடை வகுப்பு - சனிக்கிழமை
தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30
முதலாவது வினாவிடை வகுப்பு 26.02.2022
விசேட வினாவிடை வகுப்புகள்
பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எரிபொருள் விநியோகமும் பாதிப்பு

எரிபொருள் விநியோக நெருக்கடியை நாடு மோசமான பின்னடைவோடு எதிர்நோக்க வேண்டி நேரப் போகின்றது என்று எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

அதன் நெருக்கடி விளைவு ஏற்கனவே மின் விநியோகத்தில் நாட்டைத் தாக்கத் தொடங்கிவிட்டது. நாடு முழுவதும் தினசரி ஒரு மணிநேர மின்வெட்டு என்பது விரைவில் கூடிய நேரமாக விரிவுபடுத்தக் கூடிய நிலைமை உள்ளது.

மின்வெட்டுப் பிரச்சினைக்கு முதல், எரிபொருள் நிலையங்களுக்கு விநியோக வெட்டு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவு எரிபொருளே பாவனையாளர்களின் தேவைக்கு சந்தைக்கு விடுக்கப்படுகின்றது. அதன் தாக்கம் – விளைவு – இன்னும் பாவனையாளர்களை எட்டவில்லை. அதாவது அதன் விபரீதத்தை – நெருக்கடியை – இன்னும் பொதுமக்கள் நேரடியாக உணரும் நிலைமை வரவில்லை. ஆனால் விரைவில் அது அடிமடியைச் சுடும் போது மக்கள் உணர்ந்து கொள்வர்.

ஒருபுறம் எரிபொருளின் விலைகள் கணிசமாக உயரும் என்று ஆபத்து எச்சரிக்கை.

மறுபுறம், முழு எரிபொருள் விநியோகமும் நெருக்கடிக்குள் மூழ்கும் சூழல் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கையும் விடப்படுகின்றது.

எரிபொருள் கொள்வனவுக்கான நிதியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிக்கல் உள்ளது. நிதியைப் பெற்றாலும் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக அந்த நிதிப் பெறுமதிக்கு அந்நியச் செலாவணி அவசியம். அதைப் பெறுவது மிகக் கஷ்டமாக உள்ளது. அதனால் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருக் கின்றது என்று கூறுகின்றார் வலு, சக்தி அமைச்சர் உதயகம்மன்பில்ல.

ஒரு குறிப்பிட்ட விநியோக மையத்துக்கு சராசரியாக மூன்று பவுஸர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வந்தால் அதற்கு இப்போது இரண்டு அல்லது ஒரு பவுஸர் எரிபொருள்தான் விநியோகிக்கப்படுகின்றது என அமைச்சரே சுட்டிக்காட்டுகின்றார்.

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே மூன்று எரிபொருள் கப்பல்கள் காத்துக்கிடக்கின்றன. ஆனால் அவற்றுக்கான அந்நியச் செலாவணியைத் திரட்டி, செலுத்தி, அந்தக் கப்பலில் உள்ள எரிபொருளை இறக்கச் செய்ய முடியாமல் அல்லாடுகின்றது கொழும்பு.

இந்த நிலைமை நீடித்தால் – அந்நிய செலாவணியைத் திரட்டமுடியாத நிலைமை தொடர்ந்தால் – எரிபொருள் விநியோகம் முழுதாகக் குழம்பும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்தகைய நெருக்கடியால் மின்வெட்டு மாத்திரம் வரும் என்றல்ல. அதையும் தாண்டி, மக்களின் பொதுப்போக்குவரத்து ஸ்தம்பிக்கும். மக்களின் அசைவியக்கம் பாதிக்கப்படும். மக்களின் ஒவ்வொரு பாவனைப் பொருளிலும் அத்தகைய நெருக்கடி தாக்கத்தை ஏற்படுத்தும்.

நேற்றுமாலை கூட கொழும்பில் பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் தாங்கிகள் முழுமையாகக் காலியாகி அவை பாவனையாளர்களுக்குக் கைவிரித்தபோது, எரிபொருள் கையிருப்பில் இருந்த எரிபொருள் நிலையங்களை மக்கள் தேடியலைந்து அவற்றை முற்றுகையிடும் நிலைமை காணப்பட்டது.

தற்போது பொருளாதார பின்னடைவில் இருந்து நாடு மீளும்வரை இத்தகைய சிக்கல்கள் தொடரத்தான் செய்யும்.

## கண்கள் இருந்தும் பார்வையற்றவர்களாக சில அரசியல்வாதிகள் வலம் வருகின்றனர்

### ராமேஷ்வரன் எம்.பி. விசனம்

கண்கள் இருந்தும், பார்வையற்றவர்களாக வலம்வரும் சில அரசியல்வாதிகளே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லை என விமர்சிக்கின்றனர். இப்படியானவர்களுக்கு சொல்லில் அல்லாமல் நாம் செயல்கள் ஊடாகவே பதிலளித்துவருகின்றோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று( ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்குவதற்கு சுமார் ஆயிரம் தொன் மா தேவை. இவ்வாறு மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுவதால் அரசுக்கு மாதம் 12 கோடி ரூபா இழப்பு ஏற் படுகின்றது. வருடம் சுமார் 140 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படுகின்றது.

அரசுக்கு நிதிப் பற்றாக்குறை உட்பட பல பிரச்சினைகள் உள்ளன. அப்படி இருந்தும் பெருந்தோட்ட மக்களுக்கு இந்த அரசு நேசக்கரம் நீட்டுகின்றது. இதையும்கூட சிலர் இன்று விமர்சிக்கின்றனர். அமைச்சரவைக்கு சென்றமை தொடர்பாக நகைச் சுவையாகக் கதைக்கின்றனர். நல்லாட்சியின்போது 50 ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றனர். அது நடந்ததா? இல்லை.

அதேவேளை, ஜீவன் தொண்டமான் ஒன்றுமே செய்யவில்லையென சிலர் விமர்சிக்கின்றனர். அவர்கள் நிச்சயம் குருடர்களாகவே இருக்க வேண்டும். சுயதொழில் ஊக்குவிப்பு உட்பட மலையகத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களை அடிப்படையாகக்கொண்டே நாம் செயற்படுகின்றோம். மாறாக கட்சி பேதம் எம்மிடம் இல்லை. - என்றார்.

## மக்களுக்கு உண்மை நிலைமையை அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டுமாம்!

### ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இப்படிக் கருத்து

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியின் உண்மை நிலையை மக்களுக்கு அரசாங்கம் வெளிப்படையாக தெரிவிக்கவேண்டுமென ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அது சமூகக் கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும். சமூகக் கட்டமைப்பில் பல பிரச்சினைகள் தற்போது தோற்றம் பெற்றுள்ளன. அரசியல் காரணிகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அவதானம் செலுத்துவது மக்கள் பிரதிநிதிகளின் பிரதான பொறுப்பாகும்.

மக்கள் மத்தியில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடனும், உண்மைத்தன்மையுடனும் செயற்படுகிறதா என்பது கேள்விக்குரியதாக உள்ளது. நெருக்கடி நிலைமையை நாட்டு மக்களிடமிருந்து மறைக்க அரசாங்கம் மக்களைத் திசைதிருப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை பல்வேறு சம்பவங்கள் ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

தேசிய மின்னுற்பத்தி மற்றும் மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பொறுப்பான அமைச்சு உரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதை அவதானிக்க முடியவில்லை. மின்விநியோகம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சாரசபை தெரிவிக்கிறது.

ஆனால் மின்சாரத்தை துண்டிக்க அனுமதி வழங்க முடியாது என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு குறிப்பிடுகிறது. எத்தரப்பினரது கருத்தை ஏற்பது என்ற சிக்கல் நிலைமை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.- என அவர் தனது விசனத்தை வெளியிட்டுள்ளார்.

## நாட்டில் காணாமல் போனோர் சிலர் வெளிநாடுகளில் வாழ்கிறார்களாம்!

### சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் தகவல்

யுத்தம் ஒன்றின் போது காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பது அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது யதார்த்த ரீதியாக முடியாத ஒரு விடயமாகும் என சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பது அர்த்தமற்றது. அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி இந்த விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதே இதற்குத் தீர்வாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், காணாமல் போனோர்களில் சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மோட்டார் சைக்கிள் – மாட்டுவண்டி விபத்தில் ஒருவர் பரிதாபகர சாவு!



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் - மாட்டு வண்டி விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

மூளாய் பகுதியை சேர்ந்த சின்னையா லோகேஸ்வரன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

திங்கட்கிழமை
21.02.2022

# கிரேக்க தீப்பிடித்த கப்பலில் இருந்து 12 பேரைக் காணோம்; தேடும் பணி தீவிரம்



கிரேக்கத்தின் கோர்பு தீவுக்கு அருகே பயணிகள் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் காணாமல் போன 12 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அவர்கள் அனைவரும் பல்கேரியா, கிறீஸ், துருக்கி மற்றும் லிதுவேனியா நாடுகளைச் சேர்ந்த கனரக வாகன ஓட்டுநர்கள் என்று கருதப்படுகிறது.

வியாழக்கிழமை தீப்பற்றி எரியத் தொடங்கிய கப்பலில் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் ஈடுபட்டிருந்தனர். கப்பலில்சிக்கியிருந்த 280 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப் பட்டனர். இத்தாலிய நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பல் கிறீஸில் உள்ள இகோமெனிட்சாவிலிருந்து இத்தாலிய துறைமுகமான பிரிண்டிசிக்கு சென்றபோது தீ விபத்து ஏற்பட்டது.

கப்பலில் 239 பயணிகள் மற்றும் 51 பணியாளர்கள் இருந்தனர் எனக் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால் கப்பலில் பயணிகளாக பதிவு செய்யப் படாத இரண்டு ஆப்கானிஸ்தான் பிர ஜைகளும் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டனர் என கிரேக்க கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

படகில் இருந்து மீட்கப்பட்டவர்கள் கோர்புவில் உள்ள ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

இந்த தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கிரேக்க கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீ அணைக்கப்பட்டவுடன் கப்பல் பாதுகாப்பான இடத்திற்கு இழுத்துச் செல்லப்படும். அத்துடன், தீவிபத்தால் ஏற்பட்டுள்ள கடல் மாசுபாட்டை தவிர்க்கும் முயற்சியாக கடல் நீரில் கலந்துள்ள எரிபொருள் அகற்றப்படும் என கிரேக்க கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் கியானிஸ் பிளாக்கியோடாகிஸ் தெரிவித்தார்.

## போதைப்பொருள் கடத்தல் முகவரை கைதுசெய்ய ஊரை சுற்றிவளைத்தது மெக்சிக்கோ இராணுவம்!



மேற்கு மெக்சிக்கோ - மைக்கோகான் மாகாணத்தில் உள்ள போதைப்பொருள் கடத்தல் முகவர் ஒருவருக்கு சொந்தமான ஊரை மெக்சிக்கோ இராணுவம் கைப்பற்றியுள்ளது. சமீப வாரங்களில் சுற்று வட்டாரத்தில் போதைப்பொருள் கும்பல்களால் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் சிக்கி ஒருவர் கொல்லப் பட்டதோடு பலர் காயமடைந்தனர்.

இதனை அடுத்து இராணுவ வாகனங்கள் மற்றும் கண்ணிவெடி அகற்றும் குழுவினரும் குறித்த ஊரில் ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பலவருடங்களாக தலைமறைவாக இருந்த போதைப் பொருள் விற்பனை முகவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேலும் குறித்த பகுதியில் நிலவும் வன்முறை மற்றும் ஸ்திரமற்ற தன்மை காரணமாக, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்துள்ளன.



## உக்ரைன் நாட்டின் விவகாரம் தொடர்பில் கவலை வெளியிட்டார். ஐ.நா. பொதுச்செயலாளர்

உக்ரைன் எல்லையில் ரஷ்ய துருப்புக்கள் குவிவதால் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பனிப்போர் காலத்தை விட இப்போது உலகம் மிகவும் ஆபத்தான இடமாக இருப்பதாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்தார்.

பெரிய வல்லரசுகளுக்கிடையில் ஒரு சிறிய தவறு அல்லது தவறான தகவல் தொடர்பு பேரழிவான விளைவுகளை ஏற்படுத்தும் என்று குட்டெரெஸ் எச்சரித்தார்.

நாம் ஒரு புதிய பனிப்போரில் இருக்கிறோமா என்று நான் அடிக்கடி கேட்கப் படுகிறேன் என்று குட்டெரெஸ் முனிச்சில் வருடாந்திர பாதுகாப்பு மாநாட்டில் தனது தொடக்க உரையில் கூறினார். எனது பதில் என்னவென்றால், இப்போது உலகளாவிய பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் மிகவும் சிக்கலானது மற்றும் அந்த நேரத்தை விட அதிகமாக உள்ளது. 20 ஆண்டு நூற்றாண்டில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல தசாப்தங்களாக நீடித்த முட்டுக்கட்டைகள், அபாயங்களை கணக்கிடுவதற்கும் நெருக்கடிகளை தடுக்கும் வழிமுறைகள் இருந்தன என்று அவர்குறிப்பிட்டார்.




## ஆஸ்திரேலியா விமானம் மீது சீனா லேசர் தாக்குதல் நடத்தியது

சீனக் கடற்படைக் கப்பல் ஒன்று தனது போர் விமானம் ஒன்றின் மீது மிலிட்டரி கிரேட் லேசரை பிரகாசித்ததாக ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது. கடந்த வியாழக்கிழமை அன்று இந்தச் சம்பவம் நடந்தபோது, சீனக் கப்பல் வடக்கு ஆஸ்திரேலிய அரபுரா கடலில் சென்று கொண்டிருந்தது என்றும் அறிவித்துள்ளது.

இதுபோன்ற செயல்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் தொழில்சார் மற்றும் பாதுகாப்பற்ற இராணுவ நடத்தையை தாம் கடுமையாக கண்டிப்பதாகவும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும் குறித்த நடவடிக்கை தொடர்பாக சீன அதிகாரிகள் இதுவரை எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சோமாலியாவின் உணவகம் மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல்



சோமாலியாவில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அங்கு நடத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதலில்10பேர்உயிரிழந்துள்ளனர். மத்திய நகரமான Beledweyne இல், உள்ள பிரபல உணவகத்தில் குறித்த தற்கொலை குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மேலும் இந்த தாக்குதலுக்கு அல்-பாப் தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர் என சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்லாமியக் குழு ஒரு தசாப்தத்திற்கும் மேலாக சோமாலியாவின் அரசாங்கத்துடன் போராடி வருகிறது, மேலும் நாட்டின் சில பகுதிகளில் கோட்டையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.



# இந்தியாவில் தினசரி கொரோனாப் பாதிப்பு 16,051 ஆக குறைவடைந்துள்ளதாக அறிவிப்பு

இந்தியாமுழுவதுக்குமானதினசரிகொரோனா பாதிப்பு நிலைவரம் குறித்து இந்திய மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக 16,051 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இது இதற்கு முந்தைய 24 மணித்தியால எண்ணிக் கையை விட 3,917 குறைவாகும்.

கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதியிலிருந்தான நிலைவரப்படி, இந்தியாவில் தினசரிப் பாதிப்பு 16,764 ஆக இருந்தது. அது 52 நாள்களுக்கு பின்னர் 16,051 ஆகச் சரிந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 206 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும், தற்போது சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 2,02,131 ஆகவுள்ளதாகவும் இந்திய மத்திய சுகாதாரத்துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராணி எலிசபெத் கொரோனாவிலிருந்து குணமடைய பிரதமர் மோடி பிரார்த்தனை



இங்கிலாந்து ராணி 2 ஆம் எலிசபெத் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி உள்ளார் என பக்கிங்காம் அரண்மனை நேற்று உறுதிப் படுத்தியுள்ளது. அவருக்கு லேசான அறிகுறிகள் காணப்படுகின்றன. வரும் வாரத்தில் அவர் வின்ட்சரில் தங்கியிருந்து பணிகளைச் செய்வார் என பக்கிங்காம் அரண்மனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

மருத்துவ அறிவுரைகளை தொடர்ந்து பெறும் ராணி எலிசபெத், முறையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்து ராணி 2 ஆம் எலிசபெத் விரைவில் குணமடைந்து பூரண நலம்பெற வேண்டும் என இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றேன் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

# ஒட்டிப்பிறந்த இரட்டைச் சகோதரர்கள் பஞ்சாப் தேர்தலில் வாக்களித்தனர்!




பஞ்சாப் மாநிலத் தில் பிங்கல்வாராவை சேர்ந்த சோஹன்சிங், மோகன்சிங் என்ற ஒட்டிப்பிறந்த இரட்டைச் சகோதரர்கள் முதன் முதலாக நேற்று பஞ்சாப் சட்ட சபை தேர்தலில் வாக்க ளித்து தங்கள் ஜன நாயக கடமையை நிறைவேற்றியுள்ள னர்.

2003 ஜூன் மாதம் டெல்லியில் பிறந்த இவர்கள் பெற்றோரால் கைவிடப்பட்டு, சேவை நிலையம் ஒன்றினால் தத்தெடுத்து வளர்க்கப்பட்டு, கல்வி மற்றும் தொழில் பயிற்சி பெற்று பஞ்சாப் மாநில மின் கழகத்தில் பணிபுரிகின்றனர்.

இவர்கள் பிறந்ததும் இவர்களை பிரித் தெடுக்க மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது, இருவரில் ஒருவராவது இறக்க நேரிடலாம் என கூறியதால் அந்த முடிவு கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிவிக் கப்படுகிறது. இவர்களுக்கு கடந்த ஆண்டு 18 வயதாகி, வாக்குரிமை கிடைத்த பின்னர் இருவரும் தனித்தனி வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இரு தனித்தனி பட அடையாள அட்டைகளை மாநில தலைமை தேர்தல் அதிகாரி எஸ். கருணா ராஜு வழங்கியிருந்தார்.

இவர்கள் மன்னாவாலா என்ற இடத்தில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களிக்கச் சென்றபோது கிராமத் தலைவர்கள், பிரமுகர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். ஒருவர் வாக்களிப்பதை மற்றையவர் பார்க்காதிருக்க, ஒருவர் வாக்களிக் கும்போது மற்றைய சகோதரருக்கு கறுப்புக் கண்ணாடி வழங்கப்பட்டது. துணை கமிஷனர் குர்பிரீத் சிங் கோரா வாக்குச்சாவடிக்கு வந்து அவர்களுக்கு முதல் முறை வாக்காளர்கள் என்ற சான்றிதழை வழங்கினார்.

வாக்களித்த பின்னர் அவர்களைச் சந் தித்த ஊடகவியலாளர்களிடம், நாங்கள் பஞ்சாப் மாநில மின் கழகத்தில் பணி புரிகிறோம். ஆனால், இருவருக்கும் சேர்த்து ஒரே சம்பளம்தான் பெறுகிறோம். நாங்கள் வாக்குரிமை பெற்றது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது, என்று தெரிவித்துள்ளனர்.




# உத்தரப்பிரதேசத்துக்கு ஆட்சி மாற்றம் அவசியம் தனது கட்சியை நம்புமாறு மாயாவதி கோரிக்கை

உத்தரப்பிரதேச சட்டசபைக்கு நேற்று மூன்றாம் கட்ட தேர்தல் நடந்துள்ளது. பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி தனது டுவிட்டர் பக்கத்தில் இந்தத் தேர்தல் தொடர்பாக பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும். ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது. அத்துடன், ஆளுங்கட்சியின் அனைத்துவகையான ஏமாற்று வேலைகளி லிருந்தும் விடுபட ஆட்சி மாற்றமும் அவசியம். ஆளுங்கட்சியினரின் தவறான கொள்கைகளால் ஏழைகள் மேலும் ஏழைகளாகி வருகின்றனர். எனவே, பகுஜன் சமாஜ் கட்சி அளித்த வாக்குறுதி மீது முழு நம்பிக்கை வைப்பதுதான் சரியான வழிமுறை. ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பதிலாக, ஏற்கனவே இருந்த வேலைகளும் பறிக்கப் பட்டுள்ளன. வாழ்வாதாரத்துக்கு வழி செய்வதுதான் இப்போதைக்கு மிகவும் அவசியம், என்று தனது பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரத்ததான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடைபயணம் மேற்கொள்ளும் சமூக ஆர்வலர்



இரத்ததானம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் 21,000 கி.மீ தூரம் நடைபயணம் மேற்கொள்ளும் டெல்லியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் நெல்லை வந்தடைந்தார்.

டெல்லியைச் சேர்ந்த சமூக ஆர்வலரான கிரண் வர்மா என்பவர் இரத்ததானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்தியா முழுவதும் 21,000 கிலோ மீற்றர் தூரம் நடைபயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் தனது பயணத்தை தொடங்கிய அவர் கொல்லம் எர்ணாகுளம் கோயம்புத்தூர் மதுரை வழியாக திருநெல்வேலியை அடைந்துள்ளார்.

இதுவரை 50 நாள்கள் நடைபயணம் மேற்கொண்டுள்ள அவர், 1700 கிலோமீற்றர் தூரத்தைக் நடந்துள்ளார்.

நாள் தோறும் 12,000 பேர் இரத்தம் பெற இயலாது தவிக்கின்றனர் எனவும், 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இரத்தத்துக்காகக் காத்திருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் இரத்தத்துக்காகக் காத்திருந்து யாரும் இறக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தவே இந்த நடைபயணத்தை மேற்கொள்கிறேன் எனவும் கிரண் வர்மா தெரிவித்துள்ளார்.






# கிழக்கு கல்வியில் அரசியல் தலையீடு

## சீறுகிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண கல்வியில் அரசியல் தலையீடுகள் இருப்பது பாரிய பிரச்சினையாகவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கிழக்கு மாகாணத்தின் கல்வி செயற்பாடுகள்ஏனையஎட்டுமாகாணங்களையும் விட விசேடமானவையாகவுள்ளன. இதன் காரணமாக ஆசிரியர்கள், அதிபர்கள். கல்வி ஆலோசகர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் பல தடவைகள் கிழக்கு மாகாண ஆளுனர், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், கல்விப் பணிப்பாளர்களின் கவனத்திற்கு வலயக் கல்வி பணிப்பாளர்களினால் கொண்டு செல்லப்படுகின்ற போதிலும் எந்த முன்னேற்றமுமில்லை.

இதற்கான முக்கியமாக காரணமாக காணப்படுவது அரசியல் தலையீடாகும். கிழக்கு மாகாண கல்வியில் காணப்படும் அரசியல் தலையீடு என்பது பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதற்கு பின்னணியில் யார் உள்ளார்கள் என்பது எங்களுக்கு தெரியும். வலயக் கல்விப்பணிப்பாளர்கள் நியமனங்கள் மற்றும் அதிபர்கள் நியமனத்திலும் உரிய தகைமையுள்ளவர்களுக்கு அவை வழங்கப்படாமல் அல்லது நியனக. கொள்கைகளுக்கு மாறான வகையில், நியனமங்கள் வழங்கப்படுகின்றது. அதிபர்,ஆசிரியர்கள் இடமாற்றங்கள் தொடர்பிலும் இவ்வாறான பிரச்சினைகள் உள்ளன. அரசியல்வாதிகளுக்குத் தேவையான வகையிலேயே இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கல்வியை ஜனநாயக முறையில் கொண்டு செல்லவேண்டும். பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவதற்கான நியமனங்கள் கூட, இன்று அரசியல் ரீதியாகச் செய்யப்படுகின்றன.

இதற்கு நல்ல உதாரணம் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலையின் ஓர் ஆசிரியருக்குக் கூட பரீட்சை கடமைகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

தேசிய பாடசாலையின் அதிபரை இடமாற்றுமாறு ஆசிரியர்கள், கல்விச்சமூகம். தொழிற்சங்கம் என்பன ஒன்றாக இணைந்து போராடியபோதும் அந்த அதிபர்தொடர்ச்சியாகஅங்குவைக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு என்ன அதிகாரம் உள்ளது பரீட்சைக் கடமையை ஆசிரியர்களுக்கு வழங்காமல் தடுப்பதற்கு? இந்தச் சிறிய செயலே இந்த கல்வி நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் தலையீடு எவ்வாறு உள்ளது என்பதற்கு உதாரணமாகும். இது தொடர்பில் பரீட்சைகள் ஆணைக் குழுவுக்கும் அறிவித்துள்ளோம். பரீட்சைக் கடமைக்கு நியமனம் பெறுவதற்கு அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல வேண்டிய நிலையுள்ளது. இது கவலையளிக்கின்றது. – என்றர்.

# சூது விளையாடிய இடம் கந்தளாயில் முற்றுகை!

திருகோணமலை – கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பணத்திற்கு சூது விளையாடிய இடமொன்றினைத் தாங்கள் முற்றுகையிட்டனர் ரஎனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரினால் நேற்று பேராறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே சூது விளையாடிய இடம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன் போது சந்தேகநபர்கள் பொலிஸாரை கண்டு 5,000 பணத்தையும் கைவிட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சூது விளையாடிய இடத்திலிருந்து ஒரு மோட்டார் சைக்கிளையும்,ஒரு துவிச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைப்பற்றி கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெத்து வருகின்றனர்.

# நாவிதன்வெளியில் சரஸ்வதி அழகுச் சிலையை திறந்து வைத்தார் ஐக்கிய இராச்சிய அழகுராணி

(காரைதீவு நிருபர் சகா)

ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேச அழகி செல்வி இவஞ்சலின் லட்சுமணர் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில்(தேசியபாடசாலை) அவரால் நிறுவப்பட்ட 9அடி உயர சரஸ்வதி சிலையை நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திறந்துவைத்தார்.



அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளியைச. சேர்ந்த ஐக்கிய இராச்சியத்தின் இவ்வாண்டுக்கான சர்வதேச அழகி செல்வி இவஞ்சலின் லட்சுமணர் இதற்கென இலங்கை வந்திருந்தார். அவருடன் அவரது தாயார் சாந்தி ராஜகருணாவும் வருகை தந்துள்ளார். இலங்கை சுற்றுலாஅதிகார சபை அவர்களுக்கான விருந்தினர் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

சரஸ்வதித் தாயின் சிலை திறப்பு விழா வித்தியாலய அதிபர் சீ.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. சிலையை அழகுராணி இவஞ்சலின் திறந்துவைக்க, சிலைக்கான நினைவு படிமக்கல்லை அவரது தாயார் சாந்தி ராஜகருணா திரைநீக்கம் செய்து வைத்தார்.

சம்மாந்துறை வலய உதவிக் கல்விப்பணிப்பாளரும், பாடசாலை இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பிரதிஅதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் வரவேற்புரை வழங்க சிரேஷ்ட ஆசிரியர் நடராஜா கோடீஸ்வரன் நிகழ்ச்சியை நெறிப்படுத்தித் தொகுத்தளித்தார்.

1970களில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ராஜசிங்கம் அவர்களின் பேத்தியான இவர் பிரித்தானியாவின் அழகுராணியாக இரு தடவைகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

முள்ளாள் அதிபர் ராஜசிங்கத்தின் மகன் ஜீவராஜ் – சாந்தி ராஜகருணா தம்பதியினரின் மகளான அழகுராணி இவஞ்சலின் லண்டனில் பிறந்து வளர்ந்தவர். கிரிக்கட், வலைப்பந்து போன்ற விளையாட்டுகளில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர் அழகுக்கலையில் முத்திரைபதித்தவர்.

ராஜசிங்கத்தின் குடும்பத்தினர் இப்பிராந்தியத்தில் வசதியில்லாத மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் பாடாசாலைகளுக்கு உதவுதல் போன்ற சமுக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஓரங்கமாக இப்பாடசாலையில் 9அடி உயர சரஸ்வதி சிலை நிறுவ நிதியுதவி நல்கியிருந்தனர்.



# மட்டு. காங்கேயனோடையில் கைகலப்பில் ஒருவர் மரணம்!

மட்டக்களப்பு மாவட்டம் காங்கேயனோடையில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் காங்கேயனோடை வாவிக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் காங்கேயனோடை 13யைச்சேர்ந்தஇரண்டுபிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய உதுமாலெவ்வை முகம்மட் இல்பான் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்புநீதிவான்ஏ.சி.எம்.றிஸ்வான் சம்பவம் இடம் பெற்ற இடத்தைப் பார்வையிட்டார்.

இதையடுத்து காத்தான்குடி ஆதார வைத்தியாசலைக்குச் சென்று அங்கு உயிரிழந்தவரின் சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட அவர் சடலத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று, பிரேதப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர், உறவினர்களிடம் சடலத்தைக் கையளிக்குமாறு உத்தரவிட்டார். இதையடுத்து சடலம் மட்டக்களப்புபோதனாவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரைத் தாக்கியவர் ர்னக் கூறப்படும் சந்தேகநபரான காங்கேயனோடையைச் சேர்ந்த கையூம் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த நபர் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர் எனவும், அண்மையிலேயே இவர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.பி.எல். 2022 தொடர் மும்பையில் அட்டவணை விரைவில் வெளிவரும்




15 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் ஏப்ரல் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த ஐ.பி.எல். சீசனில் புதிதாக லக்னோ, குஜராத் டைட்டன்ஸ் ஆகிய இரு புதிய அணிகள் பங்கேற்கவுள்ளன. மொத்தமாக இந்தத் தொடரில் 10 அணிகள் பங்கேற்கவுள்ளதால், போட்டிகளின் எண்ணிக்கை 74 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவல் காரணமாக ஒரே இடத்தில் இந்த முறை ஐ.பி.எல். போட்டிகளை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவு செய்துள்ளது.

அதன்படி மகாராஷ்டிரா மாநிலத்தில் ஐ.பி.எல் லீக் ஆட்டங்கள் நடக்கிறது. மும்பை மற்றும் புனேயில் உள்ள 5 மைதானங்களில் போட்டிகளை நடத்தவும், உலகின் மிகப்பெரிய ஸ்டேடியமான அகமதாபாத்தில் பிளே- ஓப் சுற்று மற்றும் இறுதிப் போட்டிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, விரைவில் ஐ.பி.எல். 2022 தொடருக்கான அட்டவணையை அறிவிக்க இருப்பதாகத் தெரிகிறது.

## மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான ரி-20 தொடர் மூன்றாவது போட்டியிலும் இந்திய அணி வெற்றி!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில் இந்திய அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்று, 3 போட்டிகள் கொண்ட தொடரை 3- 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 184 ஓட்டங்களை பெற்றது. சூர்யகுமார் யாதவ் 65 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜேஸன் ஹோல்டர், செப்பர்ட், ரோஸ்டன் சேஸ், ஹெய்டன் வோல்ஷ் மற்றும் டொமினிக் ட்ரேக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 185 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 167 ஓட்டங்களை மட்டுமே பெற முடிய, இந்திய அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மேற்கிந்திய தீவுகள் அணியின் நிக்கொலஸ் பூரன் 61 ஓட்டங்களையும் செப்பர்ட் 29 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்திய அணியின் ஹர்சல் பட்டேல் 3 விக்கெட்டுகளையும் தீபக் சஹர், வெங்கடேஷ் ஐயர், சர்துல் தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுளையும் வீழ்த்தினர்.

இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இந்திய அணியின் சூர்ய குமார் யாதவ் தெரிவானார்.




### பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு

## 37 பதக்கங்களுடன் நோர்வே முதலிடம் பெற்றது

சீன தலைநகர் பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இம்மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவந்தன.

91 நாடுகள் பங்கேற்ற இந்த ஒலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தன. சீனா, ஆஸ்திரேலியா, பிரேசில், அமெரிக்கா, நோர்வே, இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான், இந்தியா உள்பட 91 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இதில் பங்கேற்றனர்.

போட்டிகளின் முடிவில் பதக்கப் பட்டியலில் 16 தங்கம், 8 வெள்ளி, 13 வெண்கலம் என 37 பதக்கங்களுடன் நோர்வே முதலிடம் பிடித்துள்ளது. 12 தங்கம், 10 வெள்ளி, 5 வெண்கலம் உள்பட 27 பதக்கங்களுடன் ஜேர்மனி இரண்டாம் இடமும், சீனா 9 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலம் என 15 பதக்கங்களுடன் மூன்றாவது இடமும் பெற்றன. அமெரிக்கா 8 தங்கம் உள்பட 25 பதக்கங்களுடன் நான்காவது இடத்தையும், சுவீடன் 18 பதக்கங்களுடன் 5 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதிக்கு சந்திரகுமார் கடிதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சமீப காலமாக இடம்பெற்று வருகின்ற பாரியளவிலான சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்தி மாவட்டத்தை எதிர்கால ஆபத்திலிருந்து பாதுகாக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

18 ஆம் திகதியிடப்பட்டு அவர் எழுதிய கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 2 வீதத்துக்கும் குறைவான பிரதேசத்தை தன்வசம் வைத்திருக்கும் கிளிநொச்சி மாவட்டம், தீவின் மொத்த நெல்லுற்பத்தியில் முதல் பத்து இடங்களுக்குள் எப்போதும் தேர்வாகியிருக்கிறது. அரிசி உற்பத்தி தவிர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிறுதானிய உற்பத்தியும் தேசத்தின் உணவு விநியோகத்துக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

கிளிநொச்சியில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியுடைய 9 பெரிய-மத்தியதர குளங்களும், மழை நீரைச் சேமித்து வைக்கக்கூடிய, இயற்கையாக உருவாகியுள்ள 359 சிறு குளங்களும் மேலே சொல்லப்பட்ட விவசாய நடவடிக்கைகளின் உயிர் நாடியாக விளங்குகின்றன.

போருக்குப் பின்னரான காலங்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சடுதியாக அதிகரித்திருந்த கட்டுமான வேலைகள், மிகப்பெரும் அளவில் மண்ணுக்கான தேவையை உருவாக்கிட, எவ்வித திட்டமிடலும் இல்லாத பாரிய மண்ணகழ்வு கிளிநொச்சியில் இருக்கக்கூடிய குளங்கள் மற்றும் நீர் வடிந்தோடும் வாய்க்கால்களை இலக்காக வைத்து வசதியுடைய தனிநபர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசியுடனும் ஒரு சில அரசியல்வாதிகளின் அரவணைப்பிலும் மேற்கொள்ளப்படும் மேற்படி சட்ட விரோத மண்ணகழ்வு, மாவட்டத்தின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய நீர் நிலைகளின் நிலவியல் அமைப்பைச் சீர்குலைத்துள்ளதோடு, நெல்லுற்பத்திக்கு நீர் வழங்கக்கூடிய பெரும் நீர்தேக்கங்களின் கட்டுமானங்களை பாதிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

கடந்த 24.01.2022 அன்று கிளிநொச்சிமாவட்டசெயலகத்தில்இடம்பெற்ற கூட்டமொன்றில் அரச அதிபர், மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்ட விரோத மணல் அகழ்வால், கிளிநொச்சியின் மிகப்பெரும் வளமான இரணைமடுக்குளம் எதிர்நோக்கும் ஆபத்துக்களைப் பட்டியலிட்டமையோடு, விவசாயத்தின் மூலாதாரமாக இருக்கக்கூடிய அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் வலியுறுத்தி இருந்தார்.

இரணைமடு நீர்த்தேக்கம் மட்டுமின்றி மாவட்டத்தில் அமைந்திருக்கக்கூடிய அனைத்து குளங்களும் வாய்க்கால்களும் தொடர்ச்சியாக மண் மாபியாக்களால் சுரண்டப்பட்டு வரும் நிலையில் அவற்றைப் பாதுகாக்குமாறு சூழலியலாளர்கள், பொது அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பல தரப்பிடமிருந்தும் அரச நிர்வாகத்துக்கு வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், மணல் அகழ்வைக் கண்டித்து ஒருசில இடங்களில் மக்கள் போராட்டங்களை நடத்தியுள்ளமையோடு, உள்ளூர் மட்டத்தில் வீதிகளை மறிப்புச் செய்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

எனினும், சட்டவிரோத மணல் அகழ்வுக்கு இன்றுவரை எவராலும் முற்றுப்புள்ளி வைக்க இயலவில்லை.

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, இராணுவத்தினரின் உதவியுடன் அண்மையில் இரணைமடு குளத்தில் மேற்கொண்ட கள ஆய்வொன்றில், குளத்தின் பிரதானமான அணைக்கட்டுக்கு அண்மையில் இடம்பெறும் அதிர்ச்சிதரக்கூடிய மண்ணகழ்வை ஆவணப்படுத்தியதோடு, அணைக்கட்டில் விரிசல் ஏற்படக்கூடிய எதிர்கால சாத்தியங்களையும் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்த அணைக்கட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு உடைப்பும், இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்டிருந்த 2004 டிசெம்பர் சுனாமியை விட மிகப்பெரும் மனிதப் பேரவலம் ஒன்றை கிளிநொச்சிக்கு விட்டு செல்லும் என என பொறியியலார்கள் ஏற்கனவே எச்சரித்திருக்கிறார்கள்.

நன்னீர் நிலைகளுக்கு சமாந்தரமாக, கரையோர கிராமங்களில் குறிப்பாக கௌதாரிமுனை, கிளாலி மற்றும் பளையில் இடம்பெறும் சட்ட விரோத மணல் அகழ்வு, கடல் நீரை மனித குடியிருப்புக்களினுள் வரவழைத்து நிலத்தை உவராக்குவதன் ஊடாக கிளிநொச்சியின் ஆன்மாவான விவசாய முயற்சிகளை அழிக்கத் தொடங்கியிருப்பதோடு "குஞ்சுக்குளம்" போன்ற கிராமங்களில் இருந்து குடியிருப்பாளர்களை இடம்பெயரவும் செய்திருக்கிறது.

சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபட்டிருக்கும் நபர்கள், தங்களது அகழ்வு நடவடிக்கைகளில் இளைஞர்களையும் சிறுவர்களையும் கணிசமான அளவில் உள்வாங்கியிருக்கின்றார்கள். மேற்படி அகழ்வின் ஊடாக கிடைக்கபெறும் சராசரிக்கும் அதிகமான வருமானம், இளம் வயதினரை மது, போதை மருந்துகளின் பக்கம் நாடச்செய்வ தோடு, சட்டத்துக்கு எதிரான குழுக்களை உருவாக்கி வளர்ப்பதற்கும் துணை நிற்கின்றது. மண் அகழ்வு தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யும் பொதுமக்கள், இத்தகைய குழுக்களால் தாக்கப்படும் சம்பவங்கள் கிளிநொச்சியில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

ஏற்கனவே இயக்கத்தில் உள்ள, மண் அகழ்வுடன் தொடர்புடைய முறைசார் திணைக்களங்கள், பாதுகாப்பு தரப்பு மற்றும் மாவட்ட-பிரதேச தலைமை அரச நிர்வாகிகள் இடையூறின்றித் தொடரும் மேற்படி சட்ட விரோத மண்ணகழ்வைத் தடுப்பதற்கு வழியின்றித் தவிக்கின்றனர்.

மேலும், மாவட்டத்திலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளாலும் இது தொடர்பில் தீர்வொன்றைக் காண இயலவில்லை. தயை கூர்ந்து, கண் முன்னே அரங்கேறும் இந்த பேரவலத்தை முடிவுக்கு கொண்டுவர உடன் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட மக்கள் - நலன் விரும்பிகள் சார்பில் தங்களை வேண்டிக் கொள்கிறேன் என அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# அத்தியாவசியப் பொருள்களின் விலை புத்தாண்டு காலத்தில் குறைவடையும்

## லசந்த அழகியவன்ன உத்தரவாதம்




அரிசி, சீனி உட்பட நுகர்வுப் பொருள்களுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு மற்றும் பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும். அந்தவகையில் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

- என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப்பகுதியில் தட்டுப்பாடின்றி மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கான சூழலை உருவாக்குவதற்காக நிதி அமைச்சர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு வாராந் தம்கூடி நிலைமைகளை சீர்செய்து வருகின்றது.

கடந்த காலங்களில் இருந்த முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. அரிசி, சீனி மற்றும் சமையல் எரிவாயுவுக்கு இருந்த தட்டுப்பாட்டு நிலை சரிசெய்யப்பட்டுள்ளது.

ஏனைய பொருள்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டு நிலையும் சீர்செய்யப்படும். எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் நியாயமான விலைக்குப் பொருள்களை வாங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே செயற்பட்டு வருகின்றோம். பெருந்தோட்ட மக்களுக்கு தற்போது மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது சம்பந்தமாகவும் ஆராயப்படும்.

தேயிலை ஏற்றுமதி மூலம் எமக்கு அந்நிய செலாவணி வருகின்றது. உலக சந்தையில் சிறந்த கேள்வி உள்ளது. இதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களே பங்களிப்பு வழங்கி வருகின்றனர். அதேவேளை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிக்கா அம்மையார், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன போன்ற ஜனாதிபதிகளின்கீழ் தொண்டமான் குடும்பம் செயற்பட்டுள்ளது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் மலையக மக்களுக்கு ஆற்றிய சேவைகளை மறந்து விடமுடியாது. ரமேஷ் உள்ளிட்டவர்கள் அதற்கு உறுதுணையாக நின்றனர்.

தற்போது சிறந்த படித்த இளம் தலைவராக ஜீவன் தொண்டமான் செயற்பட்டுவருகின்றார்.

- என்றார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விலக்ககோரும் பிரேரணை கல்முனை மாநகரசபைக்கு வருகிறது

(பாறுக் ஷிஹான்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக இல்லாமல் செய்யக் கோரும் பிரேரணை ஒன்றை கல்முனை மாநகர சபையினடுத்த அமர்வில் நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவருமான ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தாம் நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்து போராட்டத்தின் ஓரங்கமாக இன்று(நேற்று) அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, காரைதீவு உள்ளிட்ட பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

இந்தச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு ஒவ்வொருவரும் தத்தமது கையொப்பங்களை இட்டு இப்போராட்டத்தில் இணைந்து கொண்டு உங்களினதும் உங்கள் சந்ததியின் பாதுகாப்புக்காகவும் பாடுபட முன்வர வேண்டும்.

இந்த நாட்டில் கொடூரமான ஒரு சட்டமாக பயங்கரவாத தடுப்புச் சட்டம் இருப்பதை நாம் அறிவோம். அதை நீக்க் வலியுறுத்தி தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே இந்த சட்டத்தை முற்றாக எமது நாட்டில் இருந்து அகற்றுவதற்கு தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து வற்புறுத்த முன்வர வேண்டும்.

அத்துடன் நாம் அங்கம் வகிக்கின்ற கல்முனை மாநகர சபையில் கூட எதிர்வரும் மாதாந்த அமர்வில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளோம். எமது மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு தமிழர்கள் தரப்பில் தார்மீக ஆதரவை நாம் வழங்கி வருகின்றோம். அந்தவகையில் முழு மாநகர உறுப்பினர்களும் இப்பிரேரணைக்கு தத்தமது ஆதரவை வழங்குவார்கள் என நம்புகிறோம்.- எனத் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், கல்முனை மாநகர சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான குஞ்சுத்தம்பி ஏகாம்பரம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்களான அழககோன் விஜயரட்ணம், சோ. குபேரன், தி.இராசரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.02.2022இல் வெளியிடப்பெற்றது.